**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.. 114/2018 தேதி- 19.01.2026

(D.W.1) .ரவி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.சா-ஆ- 10 ல் குறிப்பிடும் பட்டிகை சொத்தும் இந்த வழக்கில் குறிப்பிடப்படும் பட்டிகை சொத்தும் ஒன்றுதான். நீதிப்பேராணையில் எடுத்திருக்கும் நிலைபாடும் இந்த வழக்கில் எடுத்திருக்கும் நிலைபாடும் ஒன்றுதான் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்து அறநிலைய துறைக்கு தொடர்பானது என நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அறநிலைய துறைக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எனக்கு பட்டிகை சொத்து அறநிலைய துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறதா என்கிற விபரம் எனக்கு தெரியாது.

நான் ஒரு அனுமானத்தின் பெயரில்தான் அறநிலைய சொத்து என கூறுகிறேன் என்றால் அறநிலைய துறையின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டியது ஆனால் தற்போது அறநிலைய துறை கட்டுப்பாட்டில் இருக்கிறதா இல்லையா என்று எனக்கு தெரியாது. தேரகவேலி மடமும் அறநிலைய துறையை சார்ந்தது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யமுடியுமா என்றால் எனக்கு நேரடியாக எந்த விபரமும் தெரியாது. பட்டிகை சொத்தும் தேரகவேலி மடமும் அறநிலைய துறையிடமிருந்து ஆவணம் வாங்கி தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். தேரகவேலி மடத்திற்கும் அறநிலைய துறைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

எனக்கோ இரண்டாம் பிரதிவாதிக்கோ எங்களுடைய மூதாதையருக்கோ ஆவணங்களின் அடிப்படையில் எங்களுக்கு உரிமை இருக்கிறதா என்றால் ஆவணங்களின் அடிப்படையில் இல்லை. பக்தர்கள் என்ற அடிப்படையில் உரிமை உண்டு. பக்தர்களின் அடிப்படையில் உரிமை உண்டு என்று நான் கூறுவதற்கு ஏதாவது ஆவணம் இருக்கிறதா என்றால் உள்ளது தாக்கல் செய்ய முடியும்.

பி.வா.சா.ஆ-1 ஆவணம் கிருஷ்ணரூ என்பவர் தேரகவேலி மடத்தில் தாமசிக்கும் லட்சுமி நாராணன்போற்றி மக்கள் மற்றும் சுப்பிரமணியன்போற்றி மற்றும் கிருஷ்ணன்போற்றிஎன்பவருக்கு எழுதிக்கொடுத்த விலையாதாரம் என்றால்

சரிதான். பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தை தேரகவேலி மடத்திலிருந்து இடைக்கோடு கிராமத்தில் வசித்த சங்கரரூ மகன் கிருஷ்ணரூ எழுதிக்கொடுத்த விலையாதாரம் என்றால் சரிதான். அதை விலை எழுதிக்கொடுப்பதற்கு அவர்களுக்கு உரிமையில்லை. கிருஷ்ணரூ என்பவர் சொத்தை பி.வா.சா.ஆ. 1 விலைஆவணம் கொடுக்கும் முன்பு வேறு நபர்களின் பெயரில் ஒற்றி எழுதி கொடுத்துள்ளார் என்றால் அவருக்கு ஒற்றி எழுதிக்கொடுக்க மட்டும்தான் உரிமை உள்ளது.

கிருஷ்ணரூ என்பவருக்கு ஒற்றி மட்டும்தான் எழுதிக்கொடுக்க முடியும் விலை எழுதிக்கொடுக்க முடியாது என்று எங்கு கூறப்பட்டுள்ளது என்றால் கோவில் சொத்து என்பதால் விலை கொடுக்க முடியாது. அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யலாம். தேரகவேலி மடத்தின் உரிமையாளர்களோ, அறநிலைய துறையினரோ அதுசம்பந்தப்பட்டவரோ பி.வா.சா.ஆ. 1 மற்றும் பி.வா.சா-.ஆ. 2 ஆவணத்தில் வழக்கு சொத்தை முறைகேடாக பயன்படுத்தியதால்தான் தாக்கல் செய்யவில்லை. தேரகவேலி மடத்தின் அங்கத்தினரை எனக்கு தெரியாது. தேரகவேலி மடத்தின் அங்கத்தினர் தற்போது எங்கு இருக்கிறார்கள் என்ற விபரம் தெரியாது அதனால் அவர்கள் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

வா.சா.ஆ.10 ஆவணத்தில் தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக தாக்கல் செய்யப்பட்ட நீதிபேராணை என்று மாண்புமிகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரிதான். தனிப்பட்ட விரோதத்தின் காரணமாக இருப்பதால் இதை பொதுநல வழக்காக தாக்கல் செய்ய முடியாது என்று ஆக்கிரமிப்பு ஏதாவது இருந்தால் கோவில் நிர்வாகம்தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 மற்றும் பி.வா.சா.ஆ. 2 நிலைக்கத்தக்கதல்ல என்றும் கோவில் நிர்வாகம் வழக்கு தாக்கல் செய்யாததால் மேற்படி 2 ஆவணங்களும் சட்டப்படி நிலைக்கத்தக்கது என்றால் கோவில் சொத்தை நிர்வாகிகளே பங்கு போட்டுக்கொண்டதால் அவர்கள் வழக்கு தாக்கல் செய்யமாட்டார்கள்.

பி.வா.சா.ஆ. 1 மற்றும் பி.வா.சா.ஆ 2 மற்றும் வா.சா.ஆ.1, வா.,சா.ஆ. 2 ஆவணங்களை ரத்து செய்யகோரி இந்த வழக்கில் நீதிமன்ற கட்டணம் கட்டி பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் வழக்கில் கூறியுள்ளேன் நீதிமன்ற கட்டணம் எதுவும் கட்டவில்லை. வாதியின் பெயரிலும் வாதிக்கு கிரையம் கொடுத்தவர்கள் பெயரில்தான் வருவாய் ஆவணங்கள் இருக்கிறது என்றால் இருக்கிறது அது

முறைகேடாக பெறப்பட்ட வருவாய் ஆவணம். 2 ஆம் பிரதிவாதி வருவாய் ஆவணங்கள் முறைகேடாக பெறப்பட்டது என்று வா.சா.ஆ. 10 நீதிபேராணை மனுவிலும் தர்க்கம் எடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.9 ஆவணப்படி 2 ஆம் பிரதிவாதி திருவட்டார் சார்பதிவாளர் அலுவலரிடம் மேற்படி ஆவணத்தை ரத்துசெய்ய கோரி மனு தாக்கல் செய்திருந்தார் அந்த மனுவின் நிலைபாடு என்ன என்றால் பத்திர பதிவு துறையினரும் , வருவாய் துறையினரும் சேர்ந்து மோசடி செய்ததால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)